4

129740

உ
கணபதிதுணை.

# நன்னூல்
# உதாரண விளக்கம்.

யாழ்ப்பாணத்து மானிப்பாய்,

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

இயற்றியது.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சபை,
பதிவு இல. 73
10. 5 1950
கிறக்கட்டளை நிலையம்,
கசெட் இல. 14005
7 6 1968

மூன்றாம்பதிப்பு.

யாழ்ப்பாணம்,
"நாவலர்" அச்சுக்கூடம்.
1937.

Copy Right Reserved.

அன்பளிப்பு
வில்க் ... சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

உ

கணபதிதுணை.

நன்னூல்

# உதாரண விளக்கம்.

த.ப 12940

400 SL|PR

யாழ்ப்பாணத்து மாவிட்டபுரம்,

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

இயற்றியது.

மூன்றாம் பதிப்பு.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரைநிலைச் சபை.
73
பதிவு இல. 10. 5 1959
அறக்கட்டளை நிலையம்
...
கசெட் இல. 7. ...

யாழ்ப்பாணம்,

நாவலர் அச்சுக்கூடம்.

1937.

*Copy Right Reserved.*

## பதிப்புரை.

இத்தேசத்துவசிக்கும் பாலியர், சொல்லிலக்கணம் முற்றுங் கற்றாராயினும், அவருட்பெரும்பான்மையோர், அவ்விலக்கணத் தைத் தாங்கற்கு மிலக்கியத்தில் ஒருங்கமைத்துக் காட்டும் வலியிலராயிருத்தல்கண்டு, நூலுணர்ச்சிக்கேற்பச் செய்கையின் பயிற்சியு மவர்க்கினிது சித்தியாம்வண்ணம், அவ்வப்பாகுபாட்டிற் கேற்ப உதாரணங்களை யெடுத்துக்காட்டி, இலக்கணங்களைக்கூறி முடிப்பின் உபயோகமாமென்பதுகருதியே இந்நூல் செய்தாம்.

## மூன்றும் பதிப்புரை.

இதுகாறும் பலர் இந்நூல் உதாரணவிளக்கத்தைக் கேட் டிருந்தும், அச்சிடுவித்தற்குப்பழைய மூலப்பிரதி கிடையாமை யால் இதுவரையும் அச்சிடுவியாதிருந்தேன். பழையபிரயோசனமி ல்லாத காகிதங்களைக்கழிக்கும்பொழுது இந்தப்பிரதி அகப்பட்டது, இதைக்கொண்டு ஆசிரியர் மாணவர்களெல்லோருக்கும் மிகவும் உபயோகமாகுமாறு இதனைப்பதிப்பிக்கலானேன்.

இங்ஙனம்
க. வைத்தியலிங்கம்.

தாது. ௵ மாசி ௴



கடவுள் துணை

நன்னூல்

# உதாரண விளக்கம்.

## ௧. பெயர்ச்சொல்.

வேற்றுமைக்கிடமாகிப் பொருளைக்காட்டுவது பெயர்ச்சொல் அப்பெயர், பொருள்-இடம்-காலம்-சினை-குணம்-தொழில் என்னும் ஆறடிகளால், அறுவகைப்படும். உதாரணம்:—

(பொன்னன்) நின்றான்:—பொருளடியாகப்பிறந்த, உயர்திணை யாண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

(திருவாதவூரன்) வந்தான்—இடவடியாகப்பிறந்த, உயர்திணை யாண்பா லொருமைப்படர்க்கைப்பெயர்.

(வேனிலான்) எரிக்கப்பட்டான்:—காலவடியாகப்பிறந்த, உயர்திணை யாண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

(பல்லன்) சொல்கின்றான்:—சினையடியாகப்பிறந்த, உயர்திணை யாண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

(கரியன்) காப்பான்:—குணவடியாகப்பிறந்த, உயர் திணையாண் பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

(கொல்லன்) செய்தான்:—தொழிலடியாகப்பிறந்த, உயர்தி ணையாண்பா லொருமைப்படர்க்கைப்பெயர்.

(பொன்னி) கொடுப்பாள்:—பொருளடியாகப்பிறந்த, உயர்தி ணைப்பெண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

(தாமரையாள்) பாடுகின்றாள்:—இடவடியாகப்பிறந்த, உயர்தி ணைப்பெண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

(பூரத்தாள்) நடந்தாள்:—காலவடியாகப்பிறந்த, உயர்திணைப் பெண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

(கண்ணி) மையப்பார்:—சினையடி யாகப்பிறந்த, உயர் திணைப் பெண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

(புலமையள்) செய்தாள்:—குணவடியாகப்பிறந்த, உயர்திணைப் பெண்பா லொருமைப்படர்க்லகப்பெயர்.

(வாணிச்சி) விற்கிறாள்:—தொழிலடியாகப்பிறந்த, உயர்திணைப்பெண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

(பொன்னர்) வருவார்:—பொருளடியாகப்பிறந்த, உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப்பெயர்.

(நகரத்தார்) கூடுகின்றார்:—இடவடியாகப்பிறந்த, உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப்பெயர்.

(மூவாட்டையார்) விளையாடினார்:—காலவடியாகப்பிறந்த, உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப்பெயர்.

(செவிடர்) போகிறார்:—சினையடியாகப்பிறந்த, உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப்பெயர்.

(நெடியர்) தாவுகின்றார்:—குணவடியாகப்பிறந்த, உயர்திணைப் பலர்பாற்படர்க்கைப்பெயர்.

(சிற்பர்) பொழிகின்றார்:—தொழிலடியாகப் பிறந்த, உயர்திணைப்பலர்பாற்படர்க்கைப்பெயர்.

(ஒருவர்) வந்தார்:—உயர்திணை யிருகூற்றொருமைப்படர்க்கைப் பொதுப் பெயர். [ந-பெ-சூ-கூஉ:]

(கவினத்தது) ஓடிற்று:—பொருளடியாகப்பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர்.

(நிலத்தது) முளைக்கின்றது:—இடவடியாகப்பிறந்த, அஃறிணை யொன்றன்பாற்படர்க்கைப்பெயர்.

(மூலத்தது) செல்கின்றது:—காலவடியாகப் பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர்.

(கோட்டது) முட்டும்:—சினையடியாகப் பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர்.

(சிறியது) வளரும்:—குணவடியாகப் பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர்.



(ஆடலது) ஆடுகின்றது:—தொழிலடியாகப்பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப்பெயர்.

(கவினத்த) கவித்தன:—பொருளடியாகப்பிறந்த, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப்பெயர்.

(நிலத்த) முளைத்தன:—இடவடியாகப்பிறந்த, அஃறிணைப்பல வின்பாற் படர்க்கைப்பெயர்.

(மூலத்த) வரும்:—காலவடியாகப்பிறந்த, அஃறிணைப்பலவின் பாற் படர்க்கைப்பெயர்.

(கோட்ட) பாய்ந்தன:—சினையடியாகப் பிறந்த, அஃறிணைப் பலவின் பாற் படர்க்கைப்பெயர்.

(சிறியன) வளர்கின்ற:—குணவடியாகப்பிறந்த, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப்பெயர்.

(ஆடல)-ஆடுகின்ற:—தொழிலடியாகப் பிறந்த, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப்பெயர்.

பறவை, மரம்:--அஃறிணையிருபாற்படர்க்கைப் பொதுப்பெயர். [மரம்விழுந்தது-மரம்விழுந்தன] பறவைவந்தது-பறவைவந்தன]

தந்தை:—இருதிணை ஆண்பா லொருமைப் படர்க்கைப் பொதுப்பெயர். [உயர்திணை-தந்தைவந்தான்; அஃறிணை-இவ்வெருதின்றந்தைவந்தது.

தாய்—இருதிணைப்பெண்பாலொருமைப்படர்க்கைப் பொதுப் பெயர். [தாய்வந்தாள்; கன்றின்தாய்வந்தது.]

ஊமை—இருதிணைமுக்கூற்றொருமைப் படர்க்கைப் பொதுப் பெயர். [ஊமைவந்தான்; ஊமைவந்தாள்; ஊமைவந்தது.]

செவியிலிகள்—இருதிணை யிருகூற்றுப்பன்மைப் படர்க்கைப் பொதுப்பெயர். [செவியிலிகள்வந்தார்; செவியிலிகள்வந்தன.]

நான்-யான்—இருதிணை முக்கூற்றுத் தன்மையொருமைப் பெயர்.

நாம்-யாம்--இருதிணையிருகூற்றுத்தன்மைப் பன்மைப்பெயர்.

நீ—இருதிணைமுக்கூற்று முன்னிலையொருமைப்பெயர்.

நீர்-நீவிர்-நீங்கள்--இருதிணையிருகூற்று முன்னிலைப்பன்மைப் பெயர்.

எல்லாம்—இருதிணைப்பன்மை மூவிடப்பொதுப்பெயர். [ந-பெ-சூ-உ௫]

## பண்புப்பெயர்.

மாட்சி-நன்மை-அழகு—பண்புப்பெயர்.

## தொழிற்பெயர்.

மறதி-போக்கு-செய்கை-நடத்தல்—தொழிற் பெயர். வெட்டு என்றாற்போல்வன—முதனிலைத்தொழிற்பெயர்.

## வினையாலணையும் பெயர்.

### தெரிநிலைவினையாலணையும்பெயர்.

வந்தானை-க்கண்டான்—உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கை யிறந்தகாலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

வருகின்றானை-ப்பார்க்கின்றேன்—உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கை நிகழ்காலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

வருவானை-ப்பார்....உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கை யெதிர்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

வந்தாளுக்கு-விருந்திட்டான்—உயர்திணைப் பெண்பாலொருமைப்படர்க்கை யிறந்தகாலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

ஆடுகின்றாளது-பொருள்—உயர்திணைப்பெண்பாலொருமைப் படர்க்கை நிகழ்காலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

செய்வாளுக்கு-ஒருபொன்கொடு—உயர்திணைப்பெண்பாலொருமைப்படர்க்கை யெதிர்காலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

பாடினருக்குப்-பரிசீந்தான்—உயர்திணைப்பலர்பாற் படர்க்கை யிறந்தகாலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

பாடுகின்றாரை-ப்புகழ்கின்றான் — உயர்திணைப் பலர்பாற்படர்க்கைநிகழ்காலத்தெரிநிலைவினையாலணையும்பெயர்.

பாடுவாரது-பாட்டைக்கேள்—உயர்திணைப் பலர்பாற் படர்க்கையெதிர்காலத்தெரிநிலைவினையாலணையும்பெயர்.

செத்ததை-யெழுப்பினான்—அஃறிணை யொன்றன்பாற்படர்க்கை யிறந்தகாலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

விழுகின்றதை-யெடுக்கின்றான் — அஃறிணையொன்றன்பாற் படர்க்கை நிகழ்காலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

அகப்படுவதால்-எறி—அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை யெதிர்காலத் தெரிநிலை வினையாலணையும் பெயர்.

கற்றன-கல்லார்—அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை யிறந்தகாலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.



கற்கின்றனவற்றை-மறைக்கின்றான் — அஃறிணைப்பலவின்பாற் படர்க்கை நிகழ்காலத்தெரிநிலைவினையாலணையும் பெயர்.

கற்பன-வுழற்றார்—அஃறிணைப்பலவின்பாற்படர்க்கை யெதிர்காலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

வந்தேனுக்கு-உதவினாய்—தன்மையொருமை யிறந்தகாலத் தெரிநிலை வினையாலணையும் பெயர்.

பூசிக்கின்றேனுக்கு-உன்னருள்தா—தன்மையொருமை நிகழ்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

வருவேனை-க்காப்பாய்—தன்மையொருமையெதிர்காலத்தெரிநிலைவினையாலணையும் பெயர்.

வந்தேமை-வினவினாய்—தன்மைப்பன்மை யிறந்தகாலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

வருகின்றேமை-வாழ்த்து—தன்மைப்பன்மைநிகழ்காலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

இரப்பேமுக்கு-ஈவாய்—தன்மைப்பன்மை யெதிர்காலத்தெரிநிலைவினையாலணையும் பெயர்.

வந்தோய்க்கு-என்செய்தேன்—முன்னிலையொருமை யிறந்தகாலத்தெரிநிலைவினையாலணையும் பெயர்.

வருகின்றோயை-த்தடுக்கின்றான—முன்னிலையொருமை நிகழ்காலத்தெரிநிலை வினையாலணையும் பெயர்.

வருவோய்க்கு-விடளிப்பேன்—முன்னிலையொருமை யெதிர்காலத்தெரிநிலைவினையாலணையும் பெயர்.

வந்ீரை - வந்தித்தேன்—முன்னிலைப் பன்மை யிறந்தகாலத் தெரிநிலை வினையாலணையும் பெயர்.

வருகின்றீர்க்கு-என்குறை—முன்னிலைப்பன்மை நிகழ்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

வருவீரை-த்தடுப்பாரிலர்—முன்னிலைப்பன்மை யெதிர்காலத் தெரிநிலை வினையாலணையும் பெயர்.

## உ. வது. குறிப்புவினையாலணையும்பெயர்.

(தெரிநிலை வினையாலணையும் பெயரெல்லா வெளிப்படக் காலங் காட்டுவன. குறிப்புவினையாலணையும் பெயர் குறிப்பிற் காலங்காட்டுவன என்பது மேல் வருமுதாரணங்களாற்றெளிக.

நேற்றைப் பொன்னனை-க்கண்டேன்....பொருளடியாகப் பிற

ந்த, உயர்திணையாண்பால் ஒருமைப்படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

முன்னை-[வாயிலாளனுக்கு] இப்போதிந்தவேலை...இடவடியாகப்பிறந்த, உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

உத்தரத்தானை-அத்தத்தானென்றார்....காலவடியாகப் பிறந்த, உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

உண்டு-குண்டோதரனாயினான்....சினையடியாகப்பிறந்த, உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

ஆலகாலம்[வெளியனை]க்கரியனாக்கியது....குணவடியாகப் பிறந்த, உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

கணக்கன்-சேனாபதியானான்...தொழிலடியாகப்பிறந்த, உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

அளவற்ற[பொன்னிக்கு] இவ்வறுமையுமுவதோ...பொருளடியாகப்பிறந்த, உயர்திணைப்பெண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

புறத்தினளை-யகத்தினளாக்கினான்....இடவடியாகப் பிறந்த, உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

காலையாளே-மாலையில்வருவாள்...காலவடியாகப்பிறந்த, உயர்திணைப்பெண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

முடத்தியை நடக்கச்செய்தான்—சினையடியாகப்பிறந்த உயர்திணைப்பெண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

குறியள்-நெடியளாயினாள்—குணவடியாகப் பிறந்த, உயர்திணைப்பெண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

இலைவாணிச்சி-இப்போது பூவாணிச்சியானாள்—தொழிலடியாகப்பிறந்த, உயர்திணைப்பெண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.



பொன்முடியர்-சடைமுடியராயினார்—பொருளடியாகப் பிறந்த, உயர்திணைப்பலர்பாற்படர்க்கைக்குறிப்புவினையாலணையும்பெயர்,

மண்ணோரை-விண்ணோராக்கினாய் — இடவடியாகப் பிறந்த, உயர்திணைப்பலர்பாற்படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

நெருநலாரை-யின்றில்லை யெனச்செய்யு மிவ்வுலகு—காலவடியாகப்பிறந்த, உயர்திணைப்பலர்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

கருங்குஞ்சியர்-வெண்குஞ்சியரானார்—சினையடியாகப் பிறந்த, உயர்திணைப் பலர்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும்பெயர்.

கற்று(வல்லர்)ஆயினார் — குணவடியாகப்பிறந்த, உயர்திணைப் பலர்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

இரப்பார்க்கீப(உழுவர்)ஆயினார் — தொழிலடியாகப் பிறந்த, உயர்திணைப்பலர்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

அற்றைக்(கலினத்ததற்கே)யொருசெவியில்லை — பொருளடியாகப்பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

அந்தரத்தது-நிலத்ததாயிற்று—இடவடியாகப் பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும்பெயர்.

காரது-வேனிலிற்கழியும்—காலவடியாகப் பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

(அக்காட்டிற் கோட்டது)இக்காட்டிலஃதிலதாயிற்று—சினையடியாகப்பிறந்த, அஃறிணையொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

வெய்யது-தண்ணிதாயிற்று —குணவடியாகப் பிறந்த, அஃறிணையொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

கார்கண்டு(ஆடலதற்கு)இப்போது இருசிறையுமில்லை—தொழிலடியாகப்பிறந்த,அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

படாத்தினவற்றைப்-படாமிலவாக்கினார் — பொருளடியாகப் பிறந்த, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

மாடத்த-கூடத்தவாயின—இடவடியாகப்பிறந்த, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

வருடத்த-மாசத்தவாயின — காலவடியாகப் பிறந்த, அஃறிணைப்பலவின்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

பல்லன-மூப்புவரின்பல்லிலவாகும் — சினையடியாகப் பிறந்த, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

பழையன-கழிதலும் புதியனபுகும்—குணவடியாகப் பிறந்த, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

உண்டு(ஓட்டத்த)-ஆன—தொழிலடியாகப்பிறந்த, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

வேலினேன்-வாளினேனாயினேன்—பொருளடியாகப் பிறந்த, தன்மையொருமைக்குறிப்புவினையாலணையும் பெயர்.

நாட்டினேற்கு - இக்காடோவாசம்—இடவடியாகப் பிறந்த, தன்மையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

சூரியன்( மூவாட்டையேனை ) நான்காட்டையேனாக்கினான்—காலவடியாகப்பிறந்த, தன்மை யொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

ஐந்துசிரசினேற்கு-இப்போது நான்காயினவே—சினையடியாகப்பிறந்த, தன்மையொருமைக் குறிப்புவினையாலணையும்பெயர்.

நஞ்சுண்டு( கரியேன் )ஆனேன்—குணவடியாகப்பிறந்த, தன்மையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

கொடையினேனுக்கு- வறுமைவந்ததே — தொழிலடியாகப் பிறந்த, தன்மையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

வென்று(வாகையேம்) ஆயினேம்—பொருளடியாகப் பிறந்த, தன்மைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

நாட்டினேமுக்கு- இக்காடோவாசம்?—இடவடியாகப்பிறந்த, தன்மைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

ஈராட்டையேம்-இப்போதுமூவாட்டையேமாயினெம்—காலவடியாகப்பிறந்த, தன்மைப் பன்மைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.



கருங்குஞ்சியேம் -வெண்குஞ்சியேமாயினேம் — சினையடியாகப்பிறந்த, தன்மைப்பன்மைப் குறிப்புவினையாலணையும் பெயர்.

இளையேம்-முதியேமாகினேம் —குணவடியாகப் பிறந்த, தன்மைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

கொடையினேம்-கொள்ளையேமாயினேம்—தொழிலடியாகப் பிறந்த, தன்மைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

வேலினை-வாளினையானதென்னை—பொருளடியாகப் பிறந்த, முன்னிலையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

தென்னாட்டினேய்க்கு-இந்நாடோ கிடைப்பது....இடவடியாகப்பிறந்த, முன்னிலையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

வேனிலாய்-இப்போதுனக்கெக்காலமும் சொந்தமாயிற்றோ... காலவடியாகப்பிறந்த, முன்னிலையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

ஐம்முகத்தோயை — நான்முகனாக்கினார் ... சினையடியாகப் பிறந்த, முன்னிலையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

பிழைத்தார்(சிறியை)யானாய் ... குணவடியாகப்பிறந்த, முன்னிலையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

ஈகையாய்-இரக்கின்றையே:...தொழிலடியாகப் பிறந்த, முன்னிலையொருமைக் குறிப்புவினையாலணையும்பெயர்.

வெண்குடையீர்க்கு:மாநிழல்குடையானதே...பொருளடியாகப்பிறந்த, முன்னிலைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

மதுரையீரை-இவ்வூர்க்கு வாசசெய்தவன்யார்...இடவடியாகப்பிறந்த, முன்னிலைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

அல்லினீர் — பகலில்வெளியுற்றதென்னே .... காலவடியாகப் பிறந்த, முன்னிலைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

இருகோட்டீர்-ஒருகோட்டீரானீர் .... சினையடியாகப்பிறந்த, முன்னிலைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

கல்வி - (சிறியீர்க்கு) முதன்மைகொடுத்தது ....குணவடியாகப் பிறந்த, முன்னிலைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

(கொலையினீர்)அருளுடையீரானீர்...தொழிலடியாகப்பிறந்த, முன்னிலைப்பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

அவன், அவள், அவர், அது, அவை, எவன், எவள், எவர், எது, எவை முதலியன. இடைச்சொல்லடியாகப் பிறந்து, பொருளாதியா

னுக்கும் பொதுவாய்த் தத்தம் பால்களின் வழுவாதுநின்று சுட்டு, வினைமுதலியபொருள்களைத்தரும் படர்க்கைப் பெயர்கள்.

பெயர்ச்சொன்னிலை நான்குவகைப்படும்:....

க. வேற்றுமையுருபேற்று வினைப்பயனிலையாயினும், பெயர்ப்பயனிலையாயினுங் கொள்வது;உ-ம்,இராவணனைக் கொன்றான்; இராவணனதுகோட்டை.

உ. வேற்றுமையுருபேலாது எழுவாய்க்குப்பயனிலையாய் வருவது; உ-ம். இராவணன் இலங்கைக்குத்துரை.

ங. வினைமுற்றுக்குப் பயனிலையாய்வருவது-உ-ம். இராவணனிறந்தான்.

ச. பெயரைவிசேடித்து நிற்பது; உ-ம். சாரைப்பாம்பு.

(கவனிப்பு)பயனிலையாவது, பயன் போய்த் தங்குதலென்னும் பொருளது. (கொன்றான்)என்னுமிடத்து, கொல்லுதற்றொழிலின் பயன் இறப்பு.இப்பயன் இராவணனிடத்தே தங்கினமையின், இராவணன் என்னும்பெயர் வேற்றுமையுருபேற்று வினைப்பயனிலை கொண்டது எ-ம், (கோட்டை) என்னுமிடத்து, அதனையுருமையாகக் கொள்ளுதலாகிய கிழமைப்பயனைக்கொள்பவன் இராவணனாதலால் இராவணன் என்பது வேற்றுமை யுருபேற்றுப்பெயர்ப் பயனிலைகொண்டது, எ-ம். துரைஎன்னுமிடத்து துரையாந்தன்மையாகியபயனைக்கொண்டவன் இராவணன் ஆதலால், அதுவேற்றுமையுருபேலாது எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது, எ-ம். கொள்க. மற்றவை வெளிப்படை.

## உ. வினைச்சொல்.

வினைமுதல்.தொழில்,காலம் முதலியவற்றைக் காட்டிநிற்பது வினைச்சொல். (வினைமுதல் – எழுவாய்)

முற்றுவினை....தெரிநிலைவினைமுற்று.

தொழுதான் ... உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்த காலத்தெரிநிலை வினைமுற்று.

தொழுகின்றான்...உயர்திணையாண்பா லொருமைப்படர்க்கை நிகழ்காலத்தெரிநிலை வினைமுற்று.

தொழுவான் .... உயர்திணையாண்பா லொருமைப்படர்க்கையெதிர்காலத்தெரிநிலைவினைமுற்று.



[இவற்றெதிர்மறை—தொழுதிலன்-தொழுகின்றிலன் - தொழான்]

ஊட்டினாள்—உயர்திணைப் பெண்பா லொருமைப் படர்க்கையி
றந்தகாலத்தெரிநிலைவினைமுற்று,ஊட்டுகின்றாள்—உயர்திணைப்பெண்
பாலொருமைப்படர்க்கை நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்று. ஊட்
டுவாள்.—உயர்திணைப் பெண்பாலொருமைப்படர்க்கை யெதிர்
காலத் தெரிநிலை வினைமுற்று.

[இவற்றெதிர்மறை—ஊட்டிலள்-ஊட்டுகின்றிலள் - ஊட்டாள்]

போற்றினர்—உயர்திணைப் பலர்பாற்படர்க்கையிறந்தகாலத்தெ
ரிநிலைவினைமுற்று. போற்றுகின்றார்—உயர்திணைப்பலர்பாற்படர்க்
கை நிகழ்காலத்தெரிநிலைவினைமுற்று. போற்றுவார்—உயர்திணைப்
பலர்பாற்படர்க்கை யெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று.

[இவற்றெதிர்மறை—போற்றிலர் - போற்றுகின்றிலர் - போற்றார்]

நின்றது — அஃறிணையொன்றன்பாற்படர்க்கை யிறந்தகாலத்
தெரிநிலைவினைமுற்று. நிற்கின்றது—அஃறிணையொன்றன்பாற்படர்
க்கை நிகழ்காலத்தெரிநிலைவினைமுற்று. நிற்கும்—அஃறிணையொன்
றன்பாற் படர்க்கையெதிர்காலத்தெரிநிலைவினைமுற்று.

[இவற்றெதிர்மறை—நின்றிலது-நிற்கின்றிலது-நில்லாது)

பணிந்தன — அஃறிணைப்பலவின்பாற்படர்க்கையிறந்தகாலத்
தெரிநிலைவினைமுற்று. பணிகின்றன—அஃறிணைப் பலவின்பாற்பட
ர்க்கை நிகழ்காலத்தெரிநிலைவினைமுற்று. பணியும் — அஃறிணைப்
பலவின்பாற்படர்க்கையெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று.

(இ—றை—பணிந்தில-பணிகின்றில-பணியா.)

சொன்னேன்—தன்மையொருமை யிறந்தகாலத்தெரிநிலைவி
னைமுற்று. சொல்லுகின்றேன்—தன்மை யொருமை நிகழ்காலத்
தெரிநிலைவினைமுற்று. சொல்லுவேன்—தன்மையொருமை யெதிர்
காலத் தெரிநிலைவினைமுற்று.

(இ—றை—சொற்றிலேன்- சொல்லுகின்றிலேன்-சொல்லேன்.)

பிறந்தேம்—தன்மைப்பன்மையிறந்தகாலத்தெரிநிலைவினை முற்
று. பிறக்கின்றேம்—தன்மைப் பன்மைநிகழ்காலத் தெரிநிலைவினை
முற்று. பிறப்பேம்—தன்மைப் பன்மையெதிர்காலத் தெரிநிலை
வினைமுற்று.

[இ—றை—பிறந்திலேம்-பிறக்கின்றிலேம்-பிறவேம்,]

நடந்தாய்—முன்னிலையொருமை யிறந்தகாலத்தெரிநிலைவினைமுற்று. நடக்கின்றாய்...முன்னிலையொருமை நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்று. நடப்பாய்...முன்னிலையொருமை யெதிர்காலத் தெரிநிலை வினைமுற்று.

[இ—றை....நடந்திலை-நடக்கின்றிலை-நடவாய்.]

பெற்றீர் ....முன்னிலைப்பன்மை யிறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று. பெறுகின்றீர்....முன்னிலைப்பன்மை நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்று. பெறுவீர்...முன்னிலைப்பன்மை யெதிர்காலத்தெரிநிலை வினைமுற்று.

[இ....றை....பெற்றிலீர்-பெறுகின்றிலீர்-பெறீர்.]

விரும்பு,விரும்பாய்....முன்னிலை யேவலொருமையெதிர்காலத் தெரிநிலை வினைமுற்று.

[இ....றை—விரும்பாதே-விரும்பேல்.]

விரும்புமின், விரும்பும்....முன்னிலையேவற்பன்மை யெதிர்காலத்தெரிநிலைவினைமுற்று.

[இ—றை....விரும்பன்மின்]

வணங்குக—இருதிணையைம்பான் மூவிடத்தெதிர்கால வியங்கோண்முற்று.

உதாரணம்:—

அவன் வணங்குக....உயர்திணை ஆண்பாற்படர்க்கை.
அவள் வணங்குக....உயர்திணைப் பெண்பாற்படர்க்கை.
அவர் வணங்குக....உயர்திணைப்பலர்பாற்படர்க்கை.
அது வணங்குக....அஃறிணையொன்றன்பாற்படர்க்கை.
அவை வணங்குக....அஃறிணைப்பலவின்பாற்படர்க்கை.
யான். நான் வணங்குக ....தன்மையொருமை.
யாம், நாம் வணங்குக....தன்மைப்பன்மை.
நீர் வணங்குக...முன்னிலைப்பன்மை.

வாழும்....பலர்பாலொழிந்த நாற்பாற்படர்க்கை நிகழ்காலவெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று. [௩-வி-சூ-௨௬.] முன்னிலையேவற்பன்மையிலும்வரும்.

---



குறிப்புவினைமுற்று.

அது மேற்கூறியபடி, பொருண்முதலாறடிகளாற் பிறத்தலின், அவ்வகையது:....

அவன்-பொன்னன்....பொருளடியாகப்பிறந்த உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

அவன்-சோணாடன்....இடவடியாகப்பிறந்த, உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கை குறிப்புவினைமுற்று.

அரி-திருவோணத்தான்....காலவடியாகப்பிறந்த உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

அரிதாமரைக்-கண்ணன் .... சினையடியாகப்பிறந்த, உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

அரி-நெடியன்....குணவடியாகப்பிறந்த, உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

அரன் அம்பலக் கூத்தன்....தொழிலடியாகப்பிறந்த, உயர்திணையாண்பா லொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

இவள்-பொற்குடையள்....பொருளடியாகப்பிறந்த, உயர்திணைப்பெண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

அவள்-பூமியாள்...இடவடியாகப்பிறந்த, உயர்திணைப் பெண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

அவள்-பூரத்தாள்...காலவடியாகப்பிறந்த, உயர்திணைப் பெண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

அவள்-கூந்தலாள்....சினையடியாகப்பிறந்த, உயர்திணைப் பெண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

உமை-கரியள்....குணவடியாகப்பிறந்த,உயர்திணைப்பெண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

உருப்பசி-கூத்தி....தொழிலடியாகப்பிறந்த,உயர்திணைப்பெண்பாலொருமைப்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

அவர்-வாளினர்....பொருளடியாகப்பிறந்த உயர்திணைப்பலர்பாற்படர்க்கைக்குறிப்புவினைமுற்று.

இவர்-கலிங்கநாடர் .... இடவடியாகப்பிறந்த, உயர்திணைப்பலர்பாற்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

இவர்-ஆதிரையர்... காலவடியாகப்பிறந்த, உயர்திணைப்பலர்பாற்படர்க்கைக்குறிப்புவினைமுற்று.

இவர்-(சடைமுடியர்)....சினையடியாகப்பிறந்த, உயர்திணைப்பலர்பாற்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

தேவர் மெய்யால்(அழகர்)....குணவடியாகப்பிறந்த, உயர்திணைப்பலர்பாற்படர்க்கைக்குறிப்புவினைமுற்று.

பார்ப்பார்(ஓதுவார்)....தொழிலடியாகப்பிறந்த, உயர்திணைப்பலர்பாற்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

குதிரை-(கலினத்தது) .... பொருளடியாகப்பிறந்த, அஃறிணையொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

பாம்பு-வளையது....இடவடியாகப்பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

இக்குதிரை சென்ற(வருடத்தது)....காலவடியாகப்பிறந்த, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினை முற்று.

இம்மிருகம்(ஒருகோட்டது)....சினையடியாகப்பிறந்த, அஃறிணையொன்றன் பாற்படர்க்கைக் குறிப்பு வினைமுற்று.

யானை(கரிது)....குணவடியாகப்பிறந்த, அஃறிணையொன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று.

பாம்பு(ஆடலது)....தொழிலடியாகப்பிறந்த, அஃறிணை யொன்றன் பாற்படர்க்கைக்குறிப்பு வினைமுற்று.

தேர்கள் (அவசத்தன)....பொருளடியாகப்பிறந்த, அஃறிணைப்பலவின் பாற்படர்க்கைக் குறிப்பு வினைமுற்று.

உடுக்கள்(வானத்த)....இடவடியாகப்பிறந்த, அஃறிணைப்பலவின் பாற்படர்க்கைக் குறிப்பு வினைமுற்று.

இப்பத்திரிகைகள்(இந்நாள)....காலவடியாகப்பிறந்த, அஃறிணைப்பலவின்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று.

அப்புஸ்தகங்கள் ( பன்னிரண்டேட்ட )....சினையடியாகப்பிறந்த, அஃறிணைப் பலவின்பாற்படர்க்கைக்குறிப்பு வினைமுற்று.

இந்நூல்கள்(சிறப்பின)....குணவடியாகப்பிறந்த, அஃறிணைப்பலவின்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

இவை(பாய்ச்சல)-தொழிலடியாகப்பிறந்த, அஃறிணைப்பலவின் பாற்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

எவன்....அஃறிணையிருபாற்படர்க்கைக்குறிப்புவினைமுற்று.உ-ம்-அஃதெவன்-அவையெவன். இஃது உயர்திணையாண்பாற் பொருளில் வரும் எவனன்று.



யார்....உயர்திணைமுப்பாற்படர்க்கைக்குறிப்புவினைமுற்று.

[அவன்யார்-அவள்யார்-அவர்யார்] [ந-வி-சூ-கூ௰]

நான் வேம்பின்குரினேன்—பொருளடியாகப் பிறந்த, தன்மையொருமைக்குறிப்புவினைமுற்று.

அகத்தினேன்--இடவடியாகப்பிறந்த-தன்மையொருமைக் குறிப்பு வினைமுற்று.

மகத்தினேன்—காலவடியாகப்பிறந்த-தன்மையொருமைக்குறிப்பு வினைமுற்று.

கண்ணினேன்—சினையடியாகப்பிறந்த-தன்மையொருமைக்குறிப்பு வினைமுற்று.

அழகினேன்....குணவடியாகப்பிறந்த-தன்மை யொருமைக்குறிப்பு வினைமுற்று.

கொடையினேன்....தொழிலடியாகப்பிறந்த, தன்மை யொருமை குறிப்பு வினைமுற்று.

நாம் தாரினேம்....பொருளடியாகப் பிறந்த, தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று.

வானத்தேம்....இடவடியாகப்பிறந்த, தன்மைப் பன்மைக்குறிப்பு வினைமுற்று.

மகத்தினேம்....காலவடியாகப்பிறந்த, தன்மைப்பன்மைக்குறிப்பு வினைமுற்று.

கண்ணினேம்....சினையடியாகப்பிறந்த, தன்மைப்பன்மைக்குறிப்பு வினைமுற்று.

அழகினேம்....குணவடியாகப்பிறந்த, தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று.

கொலையினேம்....தொழிலடியாகப் பிறந்த, தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று.

நீ(குடையாய்)....பொருளடியாகப் பிறந்த முன்னிலை யொருமைக் குறிப்பு வினைமுற்று.

வடநாட்டினை .... இடவடியாகப்பிறந்த, முன்னிலை யொருமைக் குறிப்பு வினைமுற்று.

ஓணத்தாய்-காலவடியாகப்பிறந்த, முன்னிலையொருமைக்குறிப்பு வினைமுற்று.

மதிமுகத்தினை....சினையடியாகப் பிறந்த, முன்னிலை யொருமைக் குறிப்பு வினைமுற்று.

சிறியை....குணவடியாகப்பிறந்த, முன்னிலை யொருமைக் குறிப்பு வினைமுற்று.

கேள்வியை....தொழிலடியாகப்பிறந்த, முன்னிலை யொருமைக் குறிப்பு வினைமுற்று.

நீர்குடையீர்....பொருளடியாகப் பிறந்த, முன்னிலைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று.

நாட்டினீர்...இடவடியாகப்பிறந்த, முன்னிலைப்பன்மைக்குறிப்பு வினைமுற்று.

ஓணத்தீர்....காலவடியாகப் பிறந்த, முன்னிலைப்பன்மைக் குறிப்பு வினைமுற்று.

மதிமுகத்தீர்....சினையடியாகப்பிறந்த, முன்னிலைப்பன்மைக்குறிப்பு வினைமுற்று.

மேன்மையீர்....குணவடியாகப் பிறந்த, முன்னிலைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று.

கல்வியீர்...தொழிலடியாகப்பிறந்த, முன்னிலைப்பன்மைக்குறிப்பு வினைமுற்று.

தெரிநிலைவினைமுற்றுச் சொன்னிலைமூன்றுவகைப்படும்:—

எழுவாய்க்குப் பயனிலையாய்வருவது; உ-ம்....இராமன் சீதையை மணந்தான் பெயர்ப் பயனிலைகொள்வது; உ-ம்....இராமன் சீதையை மணந்தான். வினையெச்சப்பொருள் தந்துவினைகொள்வது; உ-ம் போற்றினன் முறுவல் பூத்தான்.

கவனிப்பு. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் வேற்றுமையாதோவென்னில், இராமன் என்செய்தானென்று வினவுவழி மணந்தானென்றவிடத்து, அது பயனிலையாகக் கொள்ளப்படும்; இனி மணந்தான் யாரென்றவிடத்து, இராமன் என்னும்போது அது பெயர்ப்பயனிலையாகக் கொள்ளப்படும்.

குறிப்புவினை முற்றுச்சொன்னிலை நான்குவகைப்படும்:—

எழுவாய்க்குப் பயனிலையாய் வருவது; உதாரணம்:....இராவணன் இலங்கைக்கரசன். பெயர்ப்பயனிலை கொள்வது; உ....ம். இராவணன் இலங்கைக் கரசன். வினையெச்சப்பொருள்தந்து வினைகொள்வது. உ-ம். அவன் வில்லினன்வந்தான் பெயரெச்சப் பொருள் தந்து



பெயர்கொள்வது. உ-ம். வெந்திறலினன் விறல்வழுதி.
[கவனிப்பு.] வெந்திறலினன் என்பது சிறப்புப்பெயராய்வந்து வழுதியென்பதை விசேடியாமையின், அது இருபெயரொட்டுப் பண்புத் தொகையின் வேறு.

பெயரெச்சம்....தெரிநிலைவினைப்பெயரெச்சம்.

(வந்த) மனுஷன்... இறந்தகாலத் தெரிநிலைவினைப்பெயரெச்சம் (உதிக்கின்ற) சூரியன்....நிகழ்காலத்தெரிநிலை வினைப்பெயரெச்சம். (உதிக்கும்) சூரியன்....எதிர்காலத்தெரிநிலை வினைப் பெயரெச்சம். கல்லாதமாந்தர்: கற்கிலாதமாந்தர்....எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சம்.

குறிப்புவினைப்பெயரெச்சம்.

(பதக்கத்த) மார்பு....பொருளடியாகப்பிறந்த, குறிப்புவினைப் பெயரெச்சம். (வானத்த) நட்சத்திரம்—இடவடியாகப்பிறந்த, குறிப்புவினைப்பெயரெச்சம். (நேற்றைய) பத்திரிகை காலவடியாகப்பிறந்த, குறிப்புவினைப்பெயரெச்சம். (நுனிலைய) வேல்-சினையடியாகப்பிறந்த, குறிப்புவினைப்பெயரெச்சம், (நெடிய) கை....குணவடியாகப்பிறந்த, குறிப்புவினைப்பெயரெச்சம். (பல்கேள்விய) சான்றோர்...தொழிலடியாகப்பிறந்த, குறிப்புவினைப்பெயரெச்சம். (இல்லாத) பொருள்-எதிர்மறைக்குறிப்புவினைப்பெயரெச்சம். பெயரெச்சச்சொன்னிலை வினைமுதற்பெயர், கருவிப்பெயர், இடப்பெயர், தொழிற்பெயர், காலப்பெயர், செயப்படுபொருட்பெயர், என்னும் அறுவகைப்பெயர்களுள் ஒன்றுகொள்வது. [உ-ம்-வந்த அரசன்வென்றான். வெள்ளியவாளால்வெட்டினான். இவற்றில் வினைமுதலுங் கருவியுங் கொள்ளப்பட்டன][எஞ்சியவையை வந்துழி தெளிந்து கொள்க]

வினையெச்சம்—தெரிநிலைவினையெச்சம்.

வந்து—இறந்தகாலத் தெரிநிலைவினைவினையெச்சம், [உண்ண....முக்காலத்தெரிநிலைவினைவினையெச்சம். [உண்ணவந்தான், உண்ணவருகிறான்: உண்ணவருவான்,] வரின்....எதிர்காலத் தெரிநிலைவினை வினையெச்சம். வரின்வெல்வாய்- செய்யின்-போகின். ] உண்ணாது....எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சம் [உண்ணாதுவந்தான். ] (உண்ணாமல்.)

### குறிப்புவினை வினையெச்சம்.

மைய, மெல்ல—குறிப்புவினை வினையெச்சம். [மையடைந்தான்] அல்லாமல், அன்றி — எதிர்மறைக் குறிப்புவினை வினையெச்சம். [போவதல்லாமல்வாரான்.] வினையெச்சச்சொன்னிலை, தன்கருத்தா [வின் வினையாயினும் பிறகருத்தாவின் வினையாயினும்கொள்வது:— அவன்போய்வந்தான். அவனிடமிவனுண்டான்.]

### ௩. இடைச்சொல்.

இடைச்சொல், தனித்துவழங்கும்போது பொருள்தருதலின்றிப் பெயர்வினைகளை யடுத்துவழங்கியபோது பொருள்கொளநிற்பது. அது பதினொருவகைப்படும்.

ஐ, ஆல், கு, இன், அது, கண்—வேற்றுமையுருபிடைச் சொல் (௧) *ஞ், த், ச், இச்-த், ட்,ற், இன், ப்-வ்—இடைநிலையுருபிடைச் சொல். (௨) அன்-ஆன்-ஆள்-அள் முதலியவும். தும், தும்முதலியவும்—விகுதியுருபிடைச் சொல். (௩) அன், ஆன்; இன், இல், அத்து-முதலிய — சாரியையுருபிடைச் சொல். (௪) போல, புரைய, ஒப்பமுதலிய—உவமவுருபிடைச் சொல்.(இவற்றின்பகுதியே யிடைச்சொல். (௫) ஏ-ஓ-என-என்று முதலிய—தத்தம்பொருளுணர்த்துமிடைச்சொல். (௬) ஒடு-தெய்ய முதலிய— இசைநிறையிடைச் சொல் (௭)மா-மியா-இக-மோ முதலிய—அசைநிறையிடைச்சொல். (௮) அம்மென-இம்மென-கோவென முதலியன — ஒலிக்குறிப்பிடைச்சொல். (௯) துண்ணென-துணுக்கென முதலிய—அச்சக்குறிப்பிடைச்சொல். (௰) பொள்ளென- பெருக்கென- சட்டென முதலிய விரைவுக்குறிப்பிடைச்சொல். (௧௧) *முன்னைய நான்கும் பெயரிடைநிலை பின்னைய ஆறும் வினையிடைநிலை.

### ௪. உரிச்சொல்.

(௧) இசை, குறிப்பு,பண்பென்னும் பொருளனவாய்ப் பெயர் வினைகளைத்தழுவி அவற்றிற்குரிய குணத்தைக்காட்டிவரினும், பண்புச்சொல்லின் வேறவாய்த் தமக்கியற் சொல்லின்றிச் செய்யுட்குரிமை பூண்டுநிற்பன உரிச்சொற்கள்.

### குறிப்புரிச்சொல்.

உறு-தவ-நனி-சால். (மிகுதி.) பணை—பெருப்பு)மழ-குழ-(இளமை) கூர்-கழி-[சிறத்தல்] கதழ்-துனை(விரைவு.)தட....[கோட்டம்] கய-மென்மை; நளி—செறிவு.

### பண்புரிச்சொல்.

தட,கய,நளி—பெருமை; வெம்-விரும்புதல்; குரு-கெழு-நிறம்; செழுமை-வளன்; வாள்-ஒளி.

இசையுரிச்சொல்....துவை-சிலை- இயம்பு—[இரங்கு.]



## ஆகுபெயரும் அன்மொழியும்.

பெயரெல்லாம் பொதுவகையால், இயற்கைப்பெயர் ஆகுபெயர் என இரண்டாயடங்கும். நிலம் நீர் மரம் என்பன போல்வன இயற்கைப்பெயர்.

ஆகுபெயர் யாதானுமோர் இயைபுபற்றி ஒன்றன்பெயர் ஒன்றற்காவது; தாமரை, ஒண்ணுதல் என்பன,தம்பெயர்ப்பொருளை உணர்த்தாது, முறையே தாமரைப் பூவையும், பெண்ணையு முணர்த்தும் வழி ஆகுபெயராதல் காண்க.

பொருள்கள், மரம் என்றாற்போல ஒரு மொழிப்பெயராலும், மாமரம், தேமாமரம் என்றாற்போலப் பன்மொழிப் பெயராலும் உணரப்படும். பன்மொழிப்பெயர், தொகைநிலையாலும் தொகாநிலையாலும் அமையும். அத்தொகைநிலை அறுவகைப்படும். அவ்வறுவகையில் அன்மொழித்தொகை ஒருவகை. ஆகவே, அன்மொழித்தொகை, பன்மொழிப்பெயர் அமைகின்ற அமைதலாறு பலவற்றுள் ஒன்றையுணர்த்துவதென முடிகின்றது. முடியவே, இப்பெயர்ச்சொல் என்ன பெயர்ச்சொல் என வினா நிகழுமிடத்து அஃது இன்னபெயர்ச்சொல் என்று கூறவேண்டியவிடத்து நிற்றற்குரியதன்றாம். நிற்பின்விடைவழுவாம்; எங்ஙனமோவெனின், ஒண்ணுதல் வந்தாள் என்புழி, ஒண்ணுதல் என்பது என்ன பெயர்ச்சொல் என்னுமிடத்து, ஆகுபெயரெனல் வேண்டும்; அன்மொழித் தொகையெனின், விடைவழுவாமென்க. ஆதலின், ஒண்ணுதல் என்பதைப்பெயர் யாதென்றவழி ஆகுபெயரெனவும், தொகையாதென்றவழி அன்மொழித் தொகையெனவும் கூறல்வேண்டுமென்க. வெற்றிலை அறுபதம் என்பனவற்றை ஆகுபெயரெனக்கொண்டு ஒண்ணுதல் சிற்றிடைஎன்பனவற்றை அன்மொழியென்பார் சிலர். அது பொருந்தாது. என்னை? இலையும் பதமும்ஆகிய சினையால் முதலாகிய கொடியும் வண்டும் உணரப்படுதல்போல, நுதலும் இடையுமாகிய சினையால் முதலாகிய பெண்ணுணரப்படுதலின் பேதமின்மையானென்க.

சிவஞானமுனிவர், அறுபதம் முதலியவற்றைப் பொற்றொடி முதலியன போல அன்மொழித் தொகைப் பெயரென்று கொள்ளலாகாதோவெனில், அன்மொழித் தொகைப்பெயர், செய்யுள் செய்யும் புலவன், ஒருவரை வியப்புமுதலிய காரணத்தினாலே

தன் கூற்றாகவேனும் பிறர்கூற்றாகவேனும் பாடுமிடத்து அங்கங்கே வருவதன்றி, ஆகுபெயர்போல நியதிப் பெயராய் வருவதன்று; ஆதலால் ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றெனக் கொள்ளலாகாது என்றார்.

அற்றேல் கருவிநூலாகிய பிங்கலம், திவாகரம், நிகண்டுமுதலிய நூல்களிலே அவ்வப்பொருள்களுக்குப் பரியாயப் பெயர்களாக வரு வனவெல்லாம் தொன்றுதொட்ட நியதிப்பெயர்க ளென்பதற்கு ஆ க்ஷேபமே யில்லையன்றோ. "கறையடி," "பணிப்பகை," "சித்திரகா யம்," "சுரிகுழல்" என்பன முதலிய அன்மொழித் தொகைகள், அக்கருவிநூல்களிலே முறையே யானை, சூரியன், புலி, பெண் என்ப னவற்றிற்கு நியதிப்பெயராகவருதலால், அன்மொழித்தொகை நிய திப்பெயராக வருவதன்றுஎன்றசித்தாந்தம் பொருந்தாமைகாண்க.

இன்னும், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களும் ஒரோ வொன்றை,"இஃதிண்டாகுபெயர்" என்று ஒவ்வோரிடத்துக்கூறிப் போதலானும்,தாமரைசூடினான் என்றவழியன்றித் தாமரைமுளைத் தது, வளர்ந்தது என்றவழித் தாமரை, பூவை யுணர்த்தாமையா னும் நியதி யென்பது யாங்ஙனமோ? ஒண்ணுதல் வந்தாள், ஒண் ணுதலிற் பொட்டிட்டாள் என ஒண்ணுதல் என்னுஞ் சொல்லும் அவ்வாறே இயைபுபற்றிப் பொருள் கொள்ளக் கிடைத்தலின் இரண்டற்கும் நியதியாற் பேதங்கூறல் அமையாதென்க.

இன்னும், "குறிப்பிற்றோன்றலும்" என்றற்றொடக்கத்துச் சூத் திரத்தால் ஆகுபெயரும் அன்மொழித் தொகைச் சொல்லும் சொல்வான் வேண்டுமிடங் காலந்தோறும் தோன்றற்பால வென்றா ராதலின் அப்பேதம் பெறப்படாமைகாண்க.

அப்பால் சிவஞானமுனிவர், ஆகுபெயர் ஒன்றன்பெயரான் அத னொடியைபுபற்றிய பிறிதொன்றனை உணர்த்தி ஒருமொழிக்கண்ண தாம் என்றும், அன்மொழித் தொகைஇயைபு வேண்டாது இரு மொழியுந் தொக்க தொகையாற்றலாற் பிறிது பொருளுணர்த்தி இருமொழிக்கண்ணதாம் என்றும் சிறப்பிலக்கணம் கூறுவர்.



அற்றேல், அறுபதம் என்பது ஆகுபெய ரென்பது சிவஞான முனிவர்க்கும் ஒத்த உடன்பாடன்றோ. அஃது ஆறுஎன்னும் மொ ழியும் பதம் என்னும் மொழியுமாக இருமொழிக்கண் வருதலின் அ வர் கூறிய இலக்கணம் தோஷமுடைத் தென்க. அற்றன்று; ஆறு என்பது அடைமொழி, பதம் என்னும் மொழியே ஆகுபெயர்க் கண் வந்ததெனின், அடையின்றி வாளாபதம் என்று நிற்குமாயின், இருபதமுடைய நரர்க்கும் நான்குபதமுடைய விலங்குகளுக்கும் பி றவற்றிற்கும் வரம்பின்றிச் செல்லுமென்றஞ்சி அவற்றினியைபு நீக் கும்பொருட்டே, அறுபதத்தினையுடைய வண்டுக்கு அறுபதம் என ப் பதத்தோடு ஆறுஎன்பது அடையாக ஒட்டி வழங்கப்படுவதென் க. ஆதலின் அவ்வாகுபெயர் இருமொழியிடத்துவந்ததேயாம்.

இனி அவர் கூறிய அன்மொழிஇலக்கணத்திலே, இயைபுவேண் டாமை, தொகையாற்றல், இருமொழிமேலாதல் என்னும் மூன்று ம் அன்மொழிச் சொல்லுக்கு இன்றியமையாத இலக்கண சின்னங் களாம். ஒண்ணுதல் என்பது அவர் மதப்படி அன்மொழித் தொ கைப் பெயராகுக. அதிலே நுதல் பெண்ணுக்கு அவயவமாதலின் இயைபுண்மை பிரத்தியக்ஷம். என்னே? நுதல் தன்னையுடைய பெண் ணைக்குறித்தலின் என்க. ஆதலின் இயைபுவேண்டா தெனக்கூறி யது பொருந்தாதென்க.

இரண்டாவது தொகையாற்றலால் என்றார். "பொய்யாமொழி" என்பது, தொகையாற்ற லின்றிவருதலின் அதுவும் சிறந்த இலக்க ணமாகாமை காண்க.

அப்பால் இருமொழிக்கண்ணதாமென்றார். "தொடலைக்குறுந் தொடி" என்புழி அது மும்மொழிக்கண்ணதாயினமையின் அதுவு ம்பொருந்தாமைகாண்க. ஆதலின் அவர்கூறியஅன்மொழியிலக்கண ம்பொருந்தாவிலக்கணமாய் அதிவியாத்தி அவ்வியாத்தி அசம்பவம் என்னும் முத்தோஷங்களும் பொருந்தியதாயிற்று.

வெற்றிலை யென்புழி ஆகுபெயரென்றும், சிற்றிடை ஒண்ணுத ல் என்புழி அன்மொழித்தொகைப் பெயரென்றும் கூறுவார்க்கு இவை ஆதாரமாதல் யாங்ஙனம்? இலை என்பது அதனையுடையகொ டிக்காகுபெயரென்பார்க்குச் சுற்றிடை என்பதிலும் இடைஎன்பது

அதனையுடைய பெண்ணுக்கு ஆகுபெயரென்று கூறற்குளதாகுந் தடையாதோ? இரண்டும் அடையடுத்த ஆகுபெயரென்று கூறப் போகாவா?

இனி ஆகுபெயர்க்குத்தான் பிறழா இலக்கணம் யாதெனின்:— "யாதானுமோர் இயைபுபற்றி ஒன்றன்பெயர் ஒன்றற்காவது ஆகுபெயர்" எனச் சேனாவரையர் கூறியதே சிறந்த இலக்கணமாம் என்க. என்னை பசுவுக்கு இலக்கணம் சொன்னால் அச் சொன்ன இலக்கணமெல்லாம் பசுவினிடத்துக் காணப்படல் வேண்டும். ஒன்று பொய்ப்பினும் அஃது இலக்கணமாகாது. கிரிகுளம்பும் அலைதாடியும் பசுவுக்கு இன்றியமையாச் சிறப்பு. அவையுடைய தெது அது பசுவெனத் துணியப்படும். அவையிலதெது அது பசுவன்றெனத் துணியப்படும். ஆதலின் இவை பசுவுக்குப் பிறழா இலக்கணம். அதுபோல, இவ்வாகுபெயர் இலக்கணமும் யாண்டும் பிறழாமைகாண்க. என்னை? தாமரை, அறுபதம், ஒண்ணுதல், பொற்றொடி என்பனமுதலிய வெல்லாம் முட்டின்றி அவ்விலக்கணம் பெறுதலின் என்க.

இனி அன்மொழி—பொருள் கோடற்குஇன்றியமையாது இறுதியில் நிற்றற்குரிய சொல் எஞ்சநின்ற தொடர்மொழியாது, அஃதன்மொழித்தொகை யெனப்படும். தொகையாவது, இரண்டும் பலவுமாகிய சொற்கள் ஒட்டி ஒருசொல்லாதல். அத்தொகை, "வேற்றுமைத்தொகையே, உவமைத்தொகையே, வினையின்றொகையே பண்பின்றொகையே, உம்மைத்தொகையே, அன்மொழித்தொகையென் றவ்வாறென்ப தொகை மொழிநிலையே" என்ற சூத்திரத்தால் ஆறெனப்படும். இச் சூத்திரத்திலே தொல்காப்பியர், "தொகைமொழிநிலையே" என்றுகூறிப்போந்தமையின், அன்மொழித் தொகைப்பெயரென ஒரு பெயர்ப் பேதமில்லையென்பது வெள்ளிடைமலை. ஆகவே சொற்கள் ஒட்டிய ஒட்டுவகை ஆறனுள் அன்மொழித் தொகையெனப்படுவதும் ஒருவகையாயிற்று. ஆதலின் தமதாற்றலினாலே யொருமுதலை அவாவி இரண்டும் பலவுமாகிய சொற்கள் ஒட்டி ஒருசொல்லாதலாகிய அவதரத்தில் அன்மொழித்தொகை யென்றும், அங்ஙனம் ஒட்டியசொல், பயனிலை கோடல் வேற்றுமையேற்றல் என்னும் பெயரிலக்கணம் பெற்று நிற்கும் அவதரத்தில் ஆகுபெயரென்றும் சொல்லக்கிடப்பது அன்மொழித் தொகைச் சொல்.



என்னை? ஒண்ணுதல் என்பதனை, அச்சொற்கள் ஒட்டிநின்ற ஒட்டுநிலைக்கருதி என்னதொகையென்று வினவுமிடத்து அன்மொழித்தொகையென்றும், அத்தொடர்மொழியொருசொல்பெண்ணுக்கு என்னபெயரென்று வினவுமிடத்து ஆகுபெயரென்றும் கூறல் வேண்டும். இதுவே சேனாவரையர், பரிமேலழகர், இலக்கண விளக்க நூலார் முதலியோர் கொள்கையாம். ஆதலின் அன்மொழித் தொகையாய்நிற்கும் சொல்லெல்லாம் ஆகுபெயராய் நின்றே அவற்றது முதலையுணர்த்து'மென்க.

அப்பால், சேனாவரையர் மக்கட்சுட்டு என்பதனை அன்மொழித் தொகையென்று அறியாது கூறிவிட்டாரென்பர் சிவஞானமுனிவர். மெய்யுரைகண்ட சேனாவரையர், சிவஞானமுனிவர்கூறுவதுபோல அன்மொழித்தொகைப் பெயரென ஒருபெயர் உண்டென் றியாண்டுங் கூறினாரல்லர். அன்மொழிப் பொருண்மேல்வருஞ் சொல்லெல்லாம் ஆகுபெயரென்றல் அவர்மதமென்பது சிவஞானமுனிவர் மறந்தனர்போலும். மக்கட்சுட்டைச் சேனாவரையர் தாம் அதற்குரைத்த வுரைக்கியைய அன்மொழித் தொகையென் றதனைவிரித்துக்காட்டியதன்றி அன்மொழித் தொகைப்பெயரென்றாரல்லர்.

சிவஞானமுனிவர், வகரக்கிளவி, மக்கட்சுட்டு என்பனவற்றை இருபெயரொட்டு ஆகுபெயரெனக் கொண்டுசாதிக்கப் புகுந்தார். வகரக்கிளவி யென்பது சாரைப்பாம்பென்றாற்போல வந்த இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலைத் தொடர். என்னை பிரமாணமெனின், நச்சினார்க்கினியர். வகரக்கிளவி யென்பதற்கு வகரமாகிய எழுத்து என்று உரைகூறி, கிளவி என்பது எழுத்துக்கு ஆகுபெயரென்றனர் என்க. சாரையென்பது சிறப்புப்பெயர். பாம்பு என்பது பொதுப்பெயர். வகரம் என்பது சிறப்புப்பெயர். கிளவி என்பது எழுத்துக்கு ஆகுபெயராய் அத்தொடர்க்கண் பொதுப்பெயர்த் தன்மை பூண்டு நின்றது. கிளவி என்பது தொழிலாகுபெயராய் மொழிக்காகி அம்மொழிக்குறுப்பாகிய எழுத்துக்குமாயிற்று. ஆகவே கிளவி என்பதனை மாத்திரம் ஆகுபெயரென்னாது வகரக்கிளவி யென்பதனை இருபெயரொட்டாகுபெயரென்றல் அறியாமையின்

பாலதாம். இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கண் ஒரு பெயர் ஆகுபெயராய் வந்ததில்லையே எனின், ''ஐராவதக் கைம்மலை'' என வருதல் காண்க.

வகரக்கிளவி என்று வகரத்தோடு ஒட்டிநின்ற வழியன்றிக்கிளவி என்பது தனித்துநின்றெழுத்துக்கு ஆகுபெயராகாதே யெனின், தாமரை சூடினன் என்றவிடத்தன்றித் தாமரை மூலைத்தது என்றவிடத் தாகுபெயராகாமையால், குறிப்பைத்தரு மொழியின்றி ஆகுபெயர் குறிக்கொள்ளப்படாவென் கை.

''கனங்குழை'' ''உள்ளூர்'' ''குடைநிழல்'' ''பெருவலி'' ''பெருந்தகைமை'' ''மதிநுட்பம்''—இவையெல்லாம் ஆகுபெயரென்பது திருவள்ளுவர் பரிமேலழகருரை.

''பொருளதிகாரம்'' ''நித்திலப்பந்து'' ''நீண்முடி'' ''முந்நீர்'' ''தெண்டிரை'' ''மலர்க்கோதை''—இவையெல்லாம் ஆகுபெயரென்பது தொல்காப்பியத்துக்குஞ் சிந்தாமணிக்கும் நச்சினார்க்கினியருரை.

'' கொன்றையஞ்சடைமுடி '' சிவனுக்கு ஆகுபெயரென்பது சிலப்பதிகாரவுரை.

''உயர்திணை'' '' அஃறிணை '' '' திருவாய்மொழி ''—இவையெல்லாம் ஆகுபெயரென்மது நன்னூல்விருத்தி.

''பொற்றொடி''—முதலிய அன்மொழித் தொகைச் சொற்களைப் பெயர்ப்பாகுபாட்டை நோக்கும்போது ஆகுபெயரென்றலும் தொகைப்பாகுபாட்டை நோக்கும்போது, அன்மொழித்தொகை யென்றலுஞ் சேனாவரையர், கல்லாடர், வைத்தியநாதநாவலர் முதலியோர்மதம்.

மேலேகாட்டிய அன்மொழித்தொகைச் சொற்களெல்லாவற்றையும் ஆகுபெயரென்றுகூறும் இத்தொல்லாசிரிய சிரோமணிகள் கருத்தை யுன்றியாராயுமிடத்து அச்சொற்களுக்குத் தொகையிலக்கணங் கூறவேண்டியவிடத்து அன்மொழித் தொகையென்றும் பெயரிலக்கணம் கூறவேண்டியவிடத்து ஆகுபெயரென்றுங்கூறலே உண்மையிலக்கணமெனத்தெரியாம்.

முற்றிற்று.

—— 0 ——

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
பதிவு இல. ... 1 5 1970
14515
... 7 6 1968

# "நாவலர்" அச்சுக்கூடப் பிரசுரங்கள்.

---

| | ரூபா-சதம். |
|---|---|
| பாரதச் சுருக்கம் ... ... ... | 1 - 50 |
| ஷை (கலிக்கோ பைண்டு) ... ... | 2 - 00 |
| யாழ்ப்பாணச் சரித்திரம் ... ... | 75 |
| நன்னூல் இலகுபோதம் எழுத்ததிகாரம் | 1 - 00 |
| ஷை சொல்லதிகாரம் (அச்சில்) | |
| வினைப் பகுபத விளக்கம் ... .... | 50 |
| காளிதாச சரித்திரம் ... ... | 36 |
| பிராணி நூல் ... ... ... | 1 - 50 |
| நாட்டுச் சீவன. சாத்திரம் | |
| சுகாதாரம் ... ... ... | 1 - 25 |
| இலங்கைப் பூமிசாத்திரம் ... ... | 40 |
| இலங்கைச் சரித்திரம் ... ... | 36 |
| பூமண்டல புராணம் 1-ம் பாகம் | |
| 6-ம் தரத்துக்குரிய இதிகாசம் | 40 |
| ஷை 2-ம் பாகம் | |
| 7-ம் தரத்துக்குரிய இதிகாசம் | 40 |
| உலகச் சரித்திரமும் — | |
| — இலங்கைச்சரித்திரமும் | |
| 1-ம் பாகம் | 1 - 00 |
| ஷை 2-ம் ... | 75 |

மனேஜர் நாவலர் அச்சுக்கூடம்,
யாழ்ப்பாணம்.